08.02.2024, OS.No.284/2021, PW1 – அகமது மீரா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் மேலபாளையத்தில் கதவு எண்.123, ஆழபிள்ளை தெருவில் குடியிருக்கிறேன். என் கணவர் தொழில் எதுவும் செய்யவில்லை. என் கணவருக்கும், எனக்கும் 1970ம் ஆண்டு திருமணம் நடந்தது. எனக்கு இரண்டு பெண்குழந்தைகள், ஒரு மகன் உண்டு. என் ஒரு மகன் புகாரி சிங்கபூரில் பணி செய்து வருகிறார். அவர் சிங்கபூர் பிரஜை என்றால் சரிதான். என் மகள் சுல்தான் பீவிக்கு திருமணம் ஆகிவிட்டது. அவருக்கு 3 மகன்கள் உள்ளார்கள். அதில் ஒருவர் மருத்துவராகவும், ஒருவர் பொறியாளராகவும் இருக்கிறார். ஒரு மகன் வியட்நாமில் மருத்துவம் படித்து வருகிறார். 1ம் பிரதிவாதி என்னுடைய தாயார் ஆவார். 2ம் பிரதிவாதி என்னுடைய அண்ணன் ஆவார். 2ம் பிரதிவாதிக்கு ஒரு இரண்டு பெண் குழந்தைகள் மற்றும் ஒரு மகன் உண்டு. வயதில் என் அண்ணன் குழந்தைகளை விட என்னுடைய மகள் தான் மூப்பு என்றால் சரிதான். ஆனால் 2ம் பிரதிவாதியின் மகளுக்கு தான் முதலில் எங்கள் குடும்பத்தில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். என்னுடைய மகள் மூத்தவளாக இருக்கும்போது என்னுடைய அண்ணன் மகளுக்கு திருமணம் ஆனது சம்பந்தமாக என் அண்ணனுடன் மன வருத்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய இரண்டாவது மகளான அகமது நாச்சியாரின் கணவர் கத்தாரில் பெட்ரோலிய நிறுவனத்தில் உயர் பதவியில் இருக்கிறார் என்றால் சரிதான். அவருக்கு இரண்டு குழந்தைகள், இருவரும் பொறியாளர்களாக பெங்களூரில் ஐடி நிறுவத்தில் வேலை செய்கிறார்கள் என்றால் சரிதான். எனக்கு தற்போது 78 வயதாகிறது. என் அம்மாவிற்கு தற்போது சுமார் 98 வயது இருக்கும். நான் ைஹஜ் பயணம் போய் வந்துள்ளேன். என் அம்மா மாடு வைத்து பால் வியாபாரம் செய்து வந்தார். எங்கள் குடும்பத்தில் எனக்கு முதலில் திருமணம் நடந்ததால் திருமணம் வெகு விமர்சியாக நடந்தது என்றால் சரிதான். என்னுடைய திருமணத்தின்போது என்னுடைய அப்பா எனக்கு 100பவுண் நகை போட்டார் என்றால் சரிதான். என் அப்பா இருக்கும்வரையில் என் அப்பா சீர்சிராட்டு செய்தும், அதன்பின்னர் என் சகோதரர்கள் சீர்சிராட்டு செய்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவருக்கு மேலபாளையத்தில் பல சொத்துகள் இருந்தது என்றால் சரிதான். மேலபாளையத்தில் சுமார் 10 ஏக்கர் நிலத்தை ஜான்போஸ்கோ பள்ளிக்கு

கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு விவசாயம் தான் தொழில் ஆகும். என் தகப்பனாருக்கு 5 ஆண்குழந்தைகளும், 3 பெண் குழந்தைகளும் உண்டு. 2ம் பிரதிவாதிக்கு என்ன தொழில் என்றால் முன்பு உரக்கடை வைத்திருந்தார். பின்னர் விவசாயம் பார்த்தார். 3ம் பிரதிவாதி புரோக்கர் தொழில் செய்து வருகிறார். 5ம் பிரதிவாதி ஊனமுற்றவர் என்றால் சரிதான். அவர் அரசு ஆஸ்பத்திரியில் வேலை பார்த்தார். 4ம் பிரதிவாதி வெளிநாட்டிற்கு போய் வந்தார். வெளிநாட்டில் இருந்தார். 6ம் பிரதிவாதி பொறியாளர் படிப்பு படித்துள்ளார். தற்போது உடல் நலம் குன்றியுள்ளார் என்றால் அவர் சிகிச்சை பெற்று நன்றாக உள்ளார். என் அம்மா யாருடன் வசித்து வருகிறார் என்றால் எல்லார் வீட்டிலும் கொஞ்ச நாள் இருந்தார்கள். தற்போது 2ம் பிரதிவாதி வீட்டில் இருக்கிறார். என் அப்பா இருக்கும்போது அனைத்து பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து வைத்தார். 7, 8 பிரதிவாதிகளுக்கு என்னை போன்று என் அப்பா நல்ல முறையில் திருமணம் செய்து கொடுத்து சீர்சிராட்டு செய்தார் என்றால் சரிதான். நானும், என் கணவரும் கடலூரில் ஆயில் மில் வைத்திருந்தோம். அங்கு இரண்டு மில்கள் வைத்து வசதியாக இருந்தோம் என்றால் சரிதான். சிங்கபூரில் இருக்கும் என் மகன் வருமானங்களை எனக்கு அனுப்பி வைத்து, மேலபாளையத்தில் பல சொத்துக்களை வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மகன் புகாரிக்கு இரண்டு மகன்கள் உள்ளார்கள். இந்த வழக்கு எதற்காக போட்டுள்ளேன் என்றால் சொத்து கேட்டேன், தரவில்லை. அதனால் வழக்கு போட்டேன். 2 முதல் 6 பிரதிவாதிகளிடம் சொத்து கேட்டேன். என் அப்பா இறந்தபின்னர் கேட்டேன். என் அப்பா 2008ல் இறந்தார். அவர் இறந்து சுமார் 4 வருடங்கள் கழித்து கேட்டேன். எழுத்து பூர்வமாக எழுதி கேட்கவில்லை. இஸ்லாமிய சட்டப்படி என் அப்பா உயிரோடு இருக்கும் வரை நான் சொத்தில் பாகம் கேட்க உரிமை கிடையாது என்றால் உரிமையுள்ளது. என் அப்பா பிள்ளைகளுக்கு திருமணம் செய்து கொடுக்க பல விவசாய நிலங்களை விற்றுள்ளார் என்றால் விற்றுள்ளார். திருமணத்திற்காக விற்கவில்லை. என் அப்பாவின் உடன் பிறந்த சகோதரி பெயர் மல்கிபிவீ. அவருக்கும், என் அப்பாவிற்கும் இடையே பாகபிரிவினை நடந்தது. அந்த பாகபிரிவினையில் என் அப்பாவிற்கு 1வது தபசில் சொத்து ஒதுக்கபட்டது என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கீழவீரராகபுரத்தில்

உள்ள 88 செண்ட் இடத்தை என் இரு சகோதரர்கள் இளவர்களாக இருந்த காலத்தில் கிரையம் வாங்கபட்டது என்றால் சரிதான். என் அப்பா வாங்கினார்.

வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

8 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.